**செய்தி வெளியீடு எண்: 257** **நாள்: 07.04.2020**

**செய்தி வெளியீடு**

**கொரோனா வைரஸ் நோய் தடுப்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இதுவரை அளிக்கப்பட்டுள்ள நன்கொடை விவரங்கள் – 7.4.2020**

மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாக கொண்டு செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசு, கொரோனா வைரஸ் நோய் தொற்றினை தடுக்க பல்வேறு தீவிர நோய்தடுப்பு பணிகளையும், நிவாரணப் பணிகளையும் போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது. நோய் தொற்றினை எதிர்கொண்டு சமாளிப்பதற்கான பணிகளைக் கருத்தில் கொண்டும், ஏழை எளிய மக்கள் எதிர்கொண்டுள்ள இப்பெரிய இன்னலில் இருந்து அவர்களை விடுவிக்கவும், தீவிரமான நோய்த் தடுப்பிற்காகவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு மனம் உவந்து நன்கொடை அளிக்க விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, பல்வேறு நிறுவனங்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து **2.4.2020 அன்று வரை, மொத்தம் 62 கோடியே 30 லட்சத்து 19 ஆயிரத்து 538 ரூபாய் வரப்பெற்றுள்ளது.**

இதன் தொடர்ச்சியாக, 3.4.2020 முதல் 6.4.2020 வரையிலான நான்கு நாட்களில் 10 லட்சம் ரூபாய்க்கு மேல் மனமுவந்து நிதியுதவி வழங்கியவர்களின் விவரங்கள்:

- **பிரைட் ஸ்டார் இன்வெஸ்ட்மெட்ஸ் நிறுவனம்** 2 கோடியே 50 லட்சம் ரூபாய்;
- **கவின் கேர் நிறுவனம் 1** கோடி ரூபாய்;
- **டெல்பி டி வி எஸ் டெக்னாலஜிஸ் நிறுவனம் 1 கோடி** ரூபாய்
- **டைட்டன்** நிறுவனம் 1 கோடி ரூபாய்
- **எஸ்.பி.கே அன்டு கோ நிறுவனம்** 1 கோடி ரூபாய்
- **லூகாஸ் டி.வி.எஸ் நிறுவனம் 1 கோடி** ரூபாய்

- **தமிழ்நாடு எஜுகேசனல் அன்டு மெடிக்கல் டிரஸ்ட்** 30 லட்சம் ரூபாய்
- **ஆம்வே இந்தியா எண்டர்பிரைசஸ்** 25 லட்சம் ரூபாய்
- **TAGROS கெமிக்கல் இந்தியா நிறுவனம்** 25 லட்சம் ரூபாய்
- **TAG கார்ப்பரேசன்** 20 லட்சம் ரூபாய்
- **அம்மா சாரிட்டபில் டிரஸ்ட் 11** லட்சம் ரூபாய்
- **ஹெரிட்டேஜ் புட்ஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, சாப்டீயோன் இந்தியா, வெங்கடலெட்சுமி பேப்பர் அண்டு போர்டு, டிடிகே கன்ஷ்ட்ரக்ஷன், ஒளிரும் ஈரோடு பவுண்டேஷன், திருமதி சுதா ரகுநாதனின் சமுதாயா பவுண்டேஷன்,** ஆகிய நிறுவனங்கள் தலா 10 லட்சம் ரூபாய்

மேற்கண்ட நான்கு நாட்களில் மட்டும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு பல்வேறு தரப்பினரிடமிருந்து 17 கோடியே 44 இலட்சத்து 41 ஆயிரத்து 886 ரூபாய் வரப்பெற்றுள்ளது. **இதுவரை பெறப்பட்ட மொத்த தொகை 79 கோடியே 74 லட்சத்து 61 ஆயிரத்து 424 ரூபாய் ஆகும்.**

**மேற்படி நிவாரணம் அளித்த நிறுவனங்களுக்கும் பொதுமக்களுக்கும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.**

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**